IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சோழர்கால பெண்கள் ஆடல் நிகழ்ச்சிகளுக்காகச் செய்து கொண்ட ஒப்பனைகள

முனைவர் **பா. பிரமிளா**
இணை பேராசிரியர் & துறைத் தலைவர்
வரலாற்றுத்துறை
பாரதி மகளிர் கல்லூரி (த)
சென்னை – 600 108.

**திருமதி.நா. பாரதி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
வரலாற்றுத்துறை
பாரதி மகளிர் கல்லூரி (த)
சென்னை – 600 108.

## தலைக்கோலம்

சோழர் காலத்தில் ஆடற்பெண்கள் ஆடல் நிகழ்ச்சிகளுக்காகச் செய்து கொண்ட ஒப்பனைச் சிறப்புகள் அறிய இலக்கியம், சிற்பங்கள் கல்வெட்டுகள் துணை நிற்கின்றன. அக்கால ஒப்பனை தலைக்கோலம் அணிகலன்கள், ஆடைகள், பூசுப்பொருட்கள் என்று நாற்பெரும் பிரிவுகளாகப் பகுக்கின்றன.

சில கோயில்களில் 'ஆட்டம்' என்ற பெயரில் ஆடல் பயிலப்பட்டதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இவ்வாட்டங்கள் கோயில் தேவரடியாரால் அல்லது தளியிலாரால் நிகழ்த்தப்பட்டன. அந்நாளில் திருநல்லம் என்றழைக்கப்பட்ட கோனேரிராசபுரத்திலுள்ள உமாமகேசுவரர் திருக்கோயிலில் மூன்று நாழிகைப்போது தேவரடியார் ஆட்டம் நிகழ்த்தினர்1.

நெல்லிச்சாந்தும் கஸ்தூரியும் கலந்து கூந்தலில் தோய்த்து நீராடிப்பின் அகிற்புகைகாட்டி, வகிந்து புழுகை வார்த்து நகத்தால் கூந்தலைச் சிக்கறுத்துக், கருப்பூரப் பொடி பூசினர். கருங்குழல்களைக் கழுநீர்மாலை வைத்துப் பின்னி, கட்டிமுடித்துக் குவளைத்தாதை உள்நிறுத்தினர். இவர்தம் தலைக்கோலங்களில் பூச்சரங்கள் முத்துமாலைகள், மணிமாலைகள் பல்வகைமுகப்பணிகள் ஆகியன உரிய இடங்களில் அழகுப் பொருத்தப்பட்டன. அள்ளிமுடிந்து அழகுப்படுத்தப்பட்ட இத்தலைக் கோலங்கள் கொண்டைகளாகவும் பந்தங்களாகவும் அமைந்தன. சடைபந்தம், கேசபந்தம், குந்தளம், தம்மில்லம் எனப்படும் தமிழம் ஆகிய நான்குவகைத் தலைக்கோலங்களைச் சோழர் கால ஆடற்சிற்பங்களில் பரவலாகப் பார்க்கமுடிகிறது2.

சடைபந்தம் தலைமுடியை நன்கு வார்ச்சடைகளாகச் செய்து அவற்றைப் பந்துபோலச் சுருட்டி தலையுச்சியில் விளங்கச் செய்வதாகும். கேசபந்தம் மிகச் சிற்பங்களிலேயே காணப்படுகிறது. இதில் கேசத்தை வாரி, மகுடம் போலத் தூக்கி நிறுத்தி அதன் மேற்பகுதியில் குழல்களாகச் செய்த சுருண்ட முடியைச் சுற்றியமைத்து, பந்தத்தின் நான்கு பக்கங்களிலும் பூரிமங்கள் தைக்கப்படும் நெற்றியின் மேல்நிலையில் மணிவடங்கள் சேரப் பெற்ற ரத்தினப்பட்டம் அல்லது பூக்களாலான பூப்பட்டம் சூட்டி அழகுபடுத்தப்படும். கூந்தலை அள்ளிக் கொண்டையாக முடித்து அதைத் தலைமேலிருக்கும்படி அமைக்கும் தலைக்கோலம்

குந்தளமாகும். இது தலைக்கு நேராகவோ அல்லது பக்கவாட்டில் சாய்த்தோ அழகுற அமைக்கப்படும். சில சிற்பங்களில் இது செவியை நோக்கிச் சரிந்த நிலையிலும் காணப்படுகிறது. ஆடற்சிற்பங்களில் பரவலாகக காணப்படும் தலைக்கோலம் குந்தளம் எனலாம். முடியை முறுக்கிக் கொடியாக்கி வளைத்து தலையின் பின்னால் சேர்த்தமைத்துத் தலையுச்சிக்கு மேல் தெரியுமாறு செய்யும் தலைக்கோலம் தம்மிலலம் என்றும் தமிழம் என்றும் அழைக்கப்படும்.

# சோழர்கால பெண்கள் ஆடல் நிகழ்ச்சிகளுக்காகச் செய்து கொண்ட ஒப்பனைகள்

முனைவர் **பா. பிரமிளா**
இணை பேராசிரியர் & துறைத் தலைவர்
வரலாற்றுத்துறை
பாரதி மகளிர் கல்லூரி (த)
சென்னை – 600 108.

**திருமதி.நா. பாரதி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
வரலாற்றுத்துறை
பாரதி மகளிர் கல்லூரி (த)
சென்னை – 600 108.

## முன்னுரை

சோழர் காலத்தில் ஆடற்பெண்கள் ஆடல் நிகழ்ச்சிகளுக்காகச் செய்து கொண்ட ஒப்பனைச் சிறப்பகள் அறிய இலக்கியம், சிற்பங்கள் கல்வெட்டுகள் துணை நிற்கின்றன. அக்கால ஒப்பனை தலைக்கோலம் அணிகலன்கள், ஆடைகள், பூசுப்பொருட்கள் என்று நாற்பெரும் பிரிவுகளாகப் பகுக்கின்றன.

சில கோயில்களில் 'ஆட்டம்' என்ற பெயரில் ஆடல் பயிலப்பட்டதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. இவ்வாடடங்கள் கோயில் தேவரடியாரால் அல்லது தளியிலாரால் நிகழ்த்தப்பட்டன. அந்நாளில் திருநல்லம் என்றழைக்கப்பட்ட கோனேரிராசபுரத்திலுள்ள உமாமகேசுவரர் திருக்கோயிலில் மூன்று நாழிகைப்போது தேவரடியார் ஆட்டம் நிகழ்த்தினர்1.

## தலைக்கோலம்

நெல்லிச்சாந்தும் கஸ்தூரியும் கலந்து கூந்தலில் தோய்த்து நீராடிப்பின் அகிற்புகைகாட்டி, வகிந்து புழுகை வார்த்து நகத்தால் கூந்தலைச் சிக்கறுத்துக், கருப்பூரப் பொடி பூசினர். கருங்குழல்களைக் கழுநீர்மாலை வைத்துப் பின்னி, கட்டிமுடித்துக் குவளைத்தாதை உள்நிறுத்தினர். இவர்தம் தலைக்கோலங்களில் பூச்சரங்கள் முத்துமாலைகள், மணிமாலைகள் பல்வகைமுகப்பணிகள் ஆகியன உரிய இடங்களில் அழகுறப் பொருத்தப்பட்டன. அள்ளிமுடிந்து அழகுப்படுத்தப்பட்ட இத்தலைக்கோலங்கள் கொண்டைகளாகவும் பந்தங்களாகவும் அமைந்தன. சடைபந்தம், கேசபந்தம், குந்தளம், தம்மில்லம் எனப்படும் தமிழம் ஆகிய நான்கு வகைத் தலைக்கோலங்களைச் சோழர் கால ஆடற்சிற்பங்களில் பரவலாகப் பார்க்கமுடிகிறது2.

சடைபந்தம் தலைமுடியை நன்கு வார்ச்சடைகளாகச் செய்து அவற்றைப் பந்துபோலச் சுருட்டி தலையுச்சியில் விளங்கச் செய்வதாகும். கேசபந்தம் மிக சில சிற்பங்களிலேயே காணப்படுகிறது. இதில் கேசத்தை வாரி, மகுடம் போலத் தூக்கி நிறுத்தி அதன் மேற்பகுதியில் குழல்களாகச் செய்த சுருண்ட முடியைச் சுற்றியமைத்து, பந்தத்தின் நான்கு பக்கங்களிலும் பூரிமங்கள் தைக்கப்படும் நெற்றியின் மேல்நிலையில் மணிவடங்கள் சேரப் பெற்ற ரத்தினப்பட்டம் அல்லது பூக்களாலான பூப்பட்டம் சூட்டி அழகுபடுத்தப்படும். கூந்தலை அள்ளிக் கொடையாக முடித்து அதைத் தலைமேலிருக்கும்படி அமைக்கும் தலைக்கோலம் குந்தளமாகும். இது தலைக்கு நேராகவோ அல்லது பக்கவாட்டில் சாய்த்தோ அழகுற அமைக்கப்படும். சில சிற்பங்களில் இது செவியை நோக்கிச் சரிந்த நிலையிலும் காணப்படுகிறது. ஆடற்சிற்பங்களில் பரவலாகக் காணப்படும் தலைக்கோலம் குந்தளம் எனலாம். முடியை முறுக்கிக் கொடியாக்கி

வளைத்து தலையின் பின்னால் சேர்த்தமைத்துத் தலையுச்சிக்கு மேல் தெரியுமாறு செய்யும் தலைக்கோலம் தம்மில்லம் என்றும் தமிழம் என்றும் அழைக்கப்படும்.

**அணிகலன்கள்**

நேர்வகிட்டின் இருமருங்கிலும் சில சிற்பங்களின் தலைமுடியில் காணப்படும் சுட்டிகள் புல்லகம் எனப்படும். இவை அரைநிலா வடிவத்திலும் சூரியன் வடிவத்திலும் உள்ளன. மணிகள் பதிக்கப்பெற்ற இவற்றைச் சந்திரபிரபை என்றும் கூறுவர். வலச்சுட்டி தென்பல்லி என்றும், இடச்சுட்டி வடபல்லி என்றும் அழைக்கப்பெறும். இவ்விரு பல்லிகளும் ஒருங்கிணைந்த நிலையில் புல்லகம் எனப்படும். இவற்றை மாதவி அணிந்திருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகினறன. இத்தலையணிகள் அனைத்தையும் கும்பகோணம் நாகேஸ்வரர் கோயில் சிற்பங்களிலும் தஞ்சாவூர் இராஜராஜசுவரத்திலுள்ள சோழர் ஓவியத்தில் காணப்படும் ஆடற்பெண்களிடத்தும் காணமுடிகிறது. நெற்றியில் அணியும் பட்டிகை பட்டம் எனப்படும். இது நெற்றியின் மேல்மட்டத்தில் தனித்தோ அல்லது தலைக்கோலங்களோடு இணைந்தோ பட்டையாக அமையும். இவ்வணி தத்தின்பட்டம், பூப்பட்டம், பத்ரபட்டம் என மூவகைப்படும்3.

**செவியணிகள்**

பல்வேறு வகையான செவியணிகளைச் சிற்பங்களில் காண முடிகின்றது. அவற்றுள் குதம்பையும், குழையும் முக்கியமானவை. வளர்க்கப்பட்டுத் தொங்கும் செவித்துறையில் சுருட்டி நுழைக்கப்படும் பனையோலைச் சுருளே குதம்பை. இது பத்ரகுண்டலம் என்றும் அறியப்படும். பனையோலைக்கு மாற்றாகப் பொன்னோலையைப் பயன்படுத்துவதுமுண்டு. இதைச் 'செம்பொன் ஓலை' என்கிறது ஆடற்சிற்பங்களில் இக்குதம்பைக் காதணியைப் பெற்றுள்ளன.

குழையென்றும், குண்டலமென்றும் அழைக்கப்படும் செவியணிகள் பல சிற்பங்களில் காணப்படுகின்றன. சிம்மகுண்டலம், வியாழகுண்டலம், மகரகுண்டலமென்று முவகைக்குண்டலங்களைக் கல்வெட்டுகள் அறிமுகப்படுத்துகின்றன இவற்றுள் மகரமீனைப் போல வளைவாக அமைத்துச் செய்த மகரகுண்டலங்களே ஆடற்சிற்பங்களில் காணப்படுகின்றன4. சிவபெருமானின் ஆடல்தோற்றங்கள் பெரும்பாலானவற்றுள மகரகுண்டலம் இடம் பெற்றுள்ளது. புள்ளமங்கை, மேலப்பெரும்பள்ளம் கோயில்களில் காணப்படும். ஆடற்சிற்பங்கள் சிலவற்றிலும் மகரகுண்டலத்தைக் காணமுடியும். மகரகுண்டலமும், தேடும் ஆடற்பெண்களின் செவிகளில் மிளிர்ந்ததாகவும், குண்டலம் இந்திரவில் போல ஒளிர்ந்ததாகவும் காணமுடிகின்றது.

வட்ட வடிவமானதும், தட்டையானதும் ரத்தினஙகள் பதிக்கப் பெற்றதுமான காதணி கடிப்பு எனப்படும். சோழர் காலத்து ஆடற்பெண்கள் கடிப்பென்னும் இக்காதணியை விரும்பியணிந்தனர். கும்பகோணம் நாகேசுவரர் கோயில் மேலப் பெரும்பள்ளம் வலம்புரநாதர் கோயில் சிற்பங்கள் கல்வெட்டுகள் கொண்டு எளிதாக அறியமுடிகின்றது. இவை நீளவளர்த்த செவித்துளையிலிருந்து தொங்குமாறு, செவியோடு ஒன்றிப் பதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவற்றைத் கோடுகளின் வகைகளாகக் காணமுடிகிறது5.

**கழுத்தணிகள்**

சோழர்கால ஆடற்பெண்கள் பொன் மற்றும் நவமணிகளாலான பல்வேறு வகையான கழுத்தணிகளை அணிந்தாடினர். இவற்றுள் கண்டிகை, சவடி, சரப்பளி, மணியாரம், முத்தாரம், பதக்கங்கள் இணைத்த பொற்சங்கிலி ஆகியவை முதன்மையானவை. கழுத்தை ஒட்டியவாறு பருமணி ஒன்றும் அதன் இருமருங்கிலும் சிறுமணிகள் சிலவும் கொண்ட சரட்டிற்குக் கண்டிகை என்று பெயர் கழுத்தணிகளில் பெரிதும் அகன்றதும் சிறப்பானதுமான அணி சரப்பளியாகும். கண்டிகை, சரப்பளி, சவடி இம்மூன்றும அணிகளுமே சோழர்கால ஆடற்சிற்பங்களில் பரவலாகக் காணப்படுவதால் அக்கால ஆடற்பெண்கள் இவற்றை அணிந்தாடினர் என்பதை புள்ளமங்கை ஆலந்துறையார் கோயில், மேலப்பெரும்பள்ளம், அலம்புரநாதர் கோயில், சிற்பங்களில் இவ்வணிகள் மூன்றும் தனித்த நிலையிலும் ஒன்றிணைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

பல ஆடற்பெண்களில் பல்வகையான மணியாரங்களைக் காணமுடிகிறது மெல்லிய நீண்ட முத்துமாலைகளை அக்கால ஆடல்மகளிர் அணிந்திருந்ததை மேலப்பெரும்பள்ளம் வலம்புரநாதர் கோயில் ஆடற்சிற்பங்களால் காணமுடிகிறது. சிற்பச் செந்நூலில் காணப்படாத பதக்க மாலைகளையும், பதக்கங்கள் கோத்த சங்கிலிகளையும், பவழமணி மாலைகளையும் கும்பகோணம் நாகேசுவரர் கோயில் சிற்பங்களில் காணமுடிகின்றது. மூன்று பதக்கங்களும் கோத்த கனமான சரட்டை ஓர் ஆடலரசி அணிந்துள்ளார்6.

சிவபெருமானின் ஆடல்தோற்றங்கள் சிலவற்றில் வாகுமாலையும், சாரங்கபாணி கரணச் சிற்பங்களில் ஸ்கந்தமாலையும் இடம் பெற்றுள்ளன. இவை புயங்களைச் சுற்றியும், தோள்பரப்பின் மீது பூப்பந்தும் அமையும் பல்வகைப் பூக்களாலான சரங்களாகும். ஆடற்பெண்கள் அணிந்த பல்வேறு கழுத்தணிகளைப் பற்றி கல்வெட்டுகள் கூறுகின்றது. பூமாலைகள், செம்பவளமாலைகள், செம்பொன்னாலான ஆரங்கள், மண்கள் மின்னும் திரள் மாலைகள், மாணிக்க மாலைகள், முத்தாரங்கள் எனப் பல கழுத்தணிகளை அவர்கள் அணிந்திருந்தனர்.

**கையணிகள்**

தோள்வளை, கடவளை, கைவளை, பரியகம், மோதிரங்கள் எனப் பல்வகையான கையணிகளைச் சோழர் கால ஆடற்பெண்கள் அணிந்துள்ளனர். கடகவளை என்பது முழங்கைகளின் அருகே அணியப்படும் கையணியாகும். செம்பொற் கைவளை, நவமணிவளை, சங்குவளை, பவழவளை என்று ஐந்துவகை வளைகளைக் கடகம் எனப் பொதுப்பெயரிட்டு விளங்குகிறது. இவையனைத்தும் ஆடற்சிற்பங்களில் சோழர் காலத்தில் இவ்வளைகள் அனைத்துமே பெண்கள் அணிந்துள்ளனர்7.

பரியகம் என்னும் இணைப்பணி மிகச் சில சிற்பங்களில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. கைவிரல் மோதிரங்களைச் சூடகத்தோடு இணைக்கும் சங்கிலி போன்ற மணிச்சரம் கைச்சரியாகும். அதன் நடுப்பகுதியில் புறங்கையில் அமையும் வட்டமான பதக்கமே பரியகம். இது மணிகள் பதிக்கப்பெற்றுப் பூச்சித்திர வேலைப்பாடுகளுடன் காணப்படும். ஆடற்பெண்கள் தத்தம் கால்களில் பூட்டிய அணிகளின் அழகு பேசுமிடத்துப் பரியகம் சிந்தாமணியால் குறிக்கப்படுவது கைகளில் அணிந்தாற்போலவே பரியகம் கால்களிலும் அணியப்பட்டனர்8.

பரியகம் போலவே கைவிரல் மோதிரங்களும் அருகிலயே காணப்படுகின்றன. திருக்கோடிக்காவல் சிவன்கோயில் கண்டபாதச் சிற்பங்களில் ஒன்றில் கைவிரல் மோதிரங்கள் சிறுவிரலிலும் அணிவிரலிலும் காணப்படுகின்றன. ஆடற்பெண்கள் மோதிரங்கள் அணிந்துள்ளார். தென்னேரி சிவன் கோயிலில் உள்ள ஆடற்சிற்பமென்றில் கைவிரல் மோதிரம் உள்ளது. சிறிய மணி மோதிரங்கள் அடற்பெண்கள் அணிந்த மோதிர வகைகளையும் கல்வெட்டுக்களில் விரித்துரைக்கின்றன9.

**இடை, தொடை, அணிகள்**

இடையணிகள் இருவகைகளில் பயன்பாடுடையன. ஆடுவார் இடையழகை இவை சிறப்பித்துக் காட்டுவதுடன் அரையிலணியப் பெற்ற ஆடைகளை உடலுடன் இறுகப் பிணைத்திருக்கவும் உதவுகின்றன. முகப்பணி யோனித்தடத்தை ஒட்டியவாறு அமைய, அதனைப் பிணைக்கும் வடங்கள் இருப்பைச் சுற்றிக் கட்டப்படும். இதை ஒட்டியாணம் என்றும் கூறுவர். இந்த வடங்கள் முத்துவடங்களாகவும், மணிவடங்களாகவும் அமைந்துள்ளன. பெண்கள் கோயில்களில் நடனமாடவும், ஆடல் தோற்றங்களில் காட்சியளிக்கும் வகையாக இவையனைத்தும் அணிந்துள்ளனர்10.

**கால்களில் அணியும் அணிகள்**

பசும்பொன் செய் கிண்கிணியும் பாடகமும் பாடலைப் நலந்தெரிபொற்சிலம்பும் என்று ஆடற்பெண்களின் கால்களில் அணியப்படும். காலணிகளைச் கல்வெட்டுகள் வரிசைப்படுத்துகின்றன. திருக்கயிலாய ஞானஉலா பெண்கள் கால்களில் அணிந்துகொண்ட

அணிகளை அடையாளம் காட்டுகிறது. அவற்றுள் பரியகம் சிலம்பின் அகலத்தில் மூன்றில் ஒருபங்கு அகலமுடைய சவடியாக அமையும். இது கால்விரல் மோதிரங்களோடு சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கும் பெண்களுக்குரிய சிறப்பணியான இது சோழர் கால ஆடற்பெண்களில் அரிதாகவே காணப்படுகிறது. சிலம்பு பல ஆடற்சிற்பங்களில் பாதங்களை அலங்கரிக்கும் அணியாக விளங்குகிறது. நீள்வட்ட வடிவமாக சற்றே உள்வாங்கி வளைந்த நிலையிலும், குழாய் போன்ற அமைப்பில் வளையமாகவும் சிலம்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதில் முத்துக்கள் பதிக்கப்பற்றோ காணப்படும் சிலம்புகளும் உண்டு. பல சிலம்புகள் வெறும் கருக்கணிகளோடுதான் காணப்படுகின்றன. இச்சிலம்பு கழன்று விழாமல் இருக்கும் பொருட்டு அதன் முன்புறத்தை ஒரு சங்கிலித் தொடரால் தண்டையோடும் இணைப்பர். அரியகம், கால்விரல் மோதிரங்கள் போன்ற காலணிகளைச் சோழர் கால ஆடற்பெண்கள் அணிந்துள்ளனர்11.

சிற்பங்களிலும், இலக்கியங்களிலும் காணப்படும் இவ்வணிகலன்கள் அனைத்தும், சோழர் காலத்தில் பல்வேறு விலையுயர்ந்த மணிகள், முத்துக்கள் பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பட்டமைக்கும் பல கல்வெட்டுகள் சான்றுகளாக அமைந்துள்ளன. அவற்றுள்ளும் இராஜராஜீசுவரத்துக் கல்வெட்டுகள் சிலவும், திருவையாறு அய்யாறப்பர் கோயில் வளாகத்துள்ள வடகைலாசத்துக் கல்வெட்டுகள் சிலவும் குறிப்பிடத்தக்க தரவுகளுடன் அமைந்துள்ளன. அரைப்பட்டிகை எனும் இடுப்பணிகள் இராஜராஜீசுவரம் திருக்கோயிலுக்கு அக்காலத்துக் கொடையளிக்கப்பட்ட இறைமேனிகளுக்கெனப் பலவாய்ச் செய்தளிக்கப்பெற்றன. அவை எவ்விதம் வடிவமைக்கப்பட்டன என்பதை முதல் இராசராசனின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெளிவாய்க் காட்டுகிறது. 'திருப்பட்டிகை ஒன்றில்' கிம்பிரிமுகம் ஒன்றும், மட்டப்பூப்பநதும், மொட்டு ஒன்றும், விடங்கு நாலும் உட்படத் தடவிக் கட்டின பளிங்கு இருபதும், பொந்தி பன்னிரண்டும் கோத்து முத்து களருஞ் சக்சத்துஞ் சம்பத்தியுமான முத்து எழுநூற்று முப்பத்து நாலும், அரக்கமும் உட்பட நிறை நாற்பதின் கழஞ்சுக்கு விலைகாசு இருப்பதாறு12.

முத்து பதிக்கப்பெற்ற பொன் வளையல்களைப் பற்றியும் அதே கல்வெட்டுக் கூறுகிறது. முத்து பதிக்கப்பெற்ற பொன்வளையல்களைப் பற்றியும் அதே கல்வெட்டுக் கூறுகிறது. பொன்னின் பட்டைமேற் குண்டு வைய்த்து விளங்கின வளையில் ஒன்றிற் கோத்த முத்துவட்டமும், அனுவட்டமும் ஒப்புமுத்தும், குறுமுத்தும், முந்நூற்று எழுபத்தெட்டு உட்பட நிறை பதினொரு கழஞ்செய் முக்காலே மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு பதின்மூன்றேகாவே அரைக்கால் எத்தனை வகை முத்துக்கள் அக்காலத்தில் இருந்தன என்பதற்கு இக்கல்வெட்டுச் சிறந்த சான்றாகும்13.

இவை தவிர முச்சர முத்துமாலைகள் பொன்னாலான நெற்றிப்பட்டங்கள், திருமாலைகள் தலையில் தைக்கும் பொற்பூக்கள் தாலிமணிவடங்கள், வடுகவாளி கீழ் நியாயத்துந் திருமாலைகள், ஏகாவல்லி, கண்டநாண், வாகுவளையங்கள், களாவம், குதம்பைகள், தோடுகள், மோதிரங்கள் எனப் பலவகையான அணிகலன்களைப் பற்றி இராஜராஜீசுவரம் கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. பவளம், கோமளம் பல்வகையான முத்துக்கள், ரத்தினங்கள், வைர, வைடூரியங்கள் என மிக விளையுயர்ந்த கற்களாலான நகைகளும் இராஜராஜீசுவரம் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன14.

**ஆடைகள்**

சோழர் கால ஆடற்சிற்பங்களில் பல்வேறு விதமான ஆடைகள் காணப்படுகின்றன. இவையனைத்துமே இடுப்பிலிருந்து அணியப்பட்டவையாய் உள்ளன. உடலின் மேற்பகுதியை மறைக்கும் வகையில் ஆடைகள எதுவும் காணப்படவில்லை. ஆடும் நிலைக்கேற்ப ஆடையை பக்கத் தொங்கல்களும், இடைக்கட்டும், ஆடையின் நடுத்தொங்கலும் பல பக்கங்களில் பறக்குமாறு அமைந்துள்ளதுடன், கால்களுக்கிடையில் உள்ள இடைக்கட்டும், கால்களைத் தழுவியுள்ள ஆடையும் நன்கு தளர்ந்து, எளிதாகக் கால்களை வளைக்கவும், உயர்த்தவும், வகை செய்யுமாறு ஆடவர் ஆடல்தோற்றங்களும் ஏற்ப ஆடையமைப்பை அமைத்துக் கொள்கின்றன15.

**வாசப்பொருட்களும், பூசுபொருட்களும்**

நூல்நெறிப்படி ஒப்பனை செய்யும் நடையறி புலவர்களும் வண்ணமகளிரும் அக்காலத்தே இருந்தனர். அவர்தம் வழிகாட்டலிலும் அவரவர் அனுபவத்**திலும** ஆடற்பெண்கள் ஒப்பனை சிறந்து விளங்கியது. ஆடலரசிகள் தம் தலைமுடியை வளப்படுத்தவும், மணமூட்டவும், நெல்லிச்சாந்து, கஸ்தூரி, வாசனையூட்டப்பெற்ற எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்தினர். சிந்தூரப்பொடிகளும், செம்பொற் சுண்ணமும் கலந்த நீரில் குளித்தெழுந்தனர். ஈரம் போகத் துவட்டிய பிறகு அகிற்புகையூட்டுதல், கருப்பூரப் பொடி பூசுதல் போன்றவை நிகழ்ந்தன. மேனிக்கு மணமூட்டச் சிலர் சிதாரி புகைத்தனர் சுண்ணப்பூச்சு, சந்தனப்பூச்சு இவற்றுடன் தோளிலும் மார்புப்பகுதியிலும் தொய்யில் எழுதும் வழக்கமும் இருந்தது. வாசனை நிறைந்த சுண்ணப்பொடியை உடல்முழுவதும் பூசிக் கொண்டனர். மலர்களின் மகரந்தப் பொடிகளையும் மணிமூட்டப் பூசினர்16.

**முடிவுரை**

சாந்திக் கூத்தர் செய்து கொண்ட ஒப்பனை மணித்தோடு அணிந்து, முகத்தில் கண்ணம் எழுதி, காளிக்கும் இவர்கள் நடனமாடினர். ஆனால் கல்வெட்டுகள் முகத்தில் அரிசிமாவு பூசிக்கொண்டதாகவே குறிப்பிடுகிறது. எண்ணிறந்த வாசனைப் பொருட்கள், எழிலார் தலைககோலங்கள், கண்கவர் விலையுயர்ந்த அணிகலன்கள், நிகழிடமும் நிகழ்ச்சியும் கருதிய ஆடைகள், ஒளிநிரை முகத்திற்கும் மணம் நிறை மேனிக்கும் மேலும் எழிலூட்டும் பூசப்பொருட்களும் எனப் பல்வேறு ஒப்பனைக்கூறுகள் பொலிய ஆடல் நிகழ்த்திய அக்கால ஆடற்பெண்களை கோலம் குயிற்றிப்படம் களந்தாடும் கூத்தரெனச் கல்வெட்டுகளில் போற்றுகின்றது17.

**அடிக்குறிப்புகள்**

1. The Hindu. 17 June 1994
2. South Indian Inscriptions, Volumes 5:P612, Volumes 8:154. 13:230
3. Annual Reports on Indian Epigraphy, 1912:198.211: South Indian Incriptions, Volumes 2.66: ARE 1912:153
4. SII 4:827
5. SII 23:224:ARE 1939 – 40: 192 :SII 17:593.
6. SII 23: 2:66
7/ K/ நளினி. ,uh/ fiyf;nfhtd;. தளிச்சேரிக் கல்வெட்டு, கழக வெளியீடு, 2002. பக். 13–79
8. ARE 1919:14.
9. SII 7: 1025
10. குடவாயில் பாலசுப்பிரமணியன், தஞ்சாவூர் 5.1255. SII 2.66.
11. திருவீழிமிழலைக் கல்வெட்டுகள், p.7 8–10.
12. தளிச்சேரிக் கல்வெட்டுகள், p.8–10.
13. குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ்சாவூர், ப.270 – 271.
14. kapila vastyayan, Dance sculpture in sarangapani Temple, P.8-10
15. இவ்விசைக்கருவி பேரிகையாகலாம், கோயில்களில் பேரிகை வாசிக்கப்பட்டதற்குப் பருத்திப்பள்ளி ஆதிகேசவப் பெருமாள் கோயில் கல்வெட்டுச் சான்றாக அமைந்துள்ளது.
16. திருவீழிமிழலைக் கல்வெட்டுகள், 525 – 528.
17. ARE 1970 -71: 539: 1914:65: திருவீழிமிழலைக் கல்வெட்டுகள் 528 : நன்னிலம் கல்வெட்டுகள். 258 A